**செய்தி வெளியீடு எண்.21/2017 நாள்: 05.04.2017**

# சென்னைக் குடிநீர் வாரியம் இந்த நிதியாண்டு ரூபாய் 40 கோடி அதிகமாக வசூல் செய்தது

------

2016–17ம் நிதியாண்டில் சென்னைக் குடிநீர் வாரியம் வரி மற்றும் கட்டணமாக இதுநாள்வரை வசூலித்ததிலேயே அதிகபட்ச தொகையாக ரூபாய் 437 கோடி என்ற இலக்கு எட்டப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு வசூலிக்கப்பட்ட தொகையான ரூபாய் 397 கோடியை விட 40 கோடி, அதாவது 10% கூடுதலாகும். நடப்பு நிதியாண்டின் துவக்கம் முதலே வசூல் செய்வதற்கு எடுக்கப்பட்ட 250 வருவாய் வசூல் முன்னறிவிப்புகள் மற்றும் 40 சொத்துக்கள் முடக்கம் போன்ற தீவிர செயல்பாட்டினால் இந்த இலக்கு எட்டப்பட்டுள்ளது.

2017–18ம் நிதியாண்டின் முதல் காலாண்டின் தொடக்கத்திலேயே குடிநீர் வரி மற்றும் கட்டணங்கள் வசூல் செய்திட குடிநீர் வாரியம் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளது. மேலும் வாரியம் தனது சிறந்த சேவைகளை தொடரவும், கூடுதல் மேல் வரி, இணைப்பைத்துண்டித்தல் மற்றும் ஜப்தி முதலிய நடவடிக்கைகளை தவிர்த்திட ஏதுவாகவும் வரி செலுத்துவோர் மற்றும் நுகர்வோர் தங்களின் நிலுவைத்தொகையை உடனடியாக செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்